## சுருக்கம்

பொதுப்பணிகள் – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி ஆர்.கவிதா, த/பெ. காலஞ்சென்ற திரு. எஸ்.இரத்தினகிரி– இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் அரசாணைக்கு விலக்களித்தும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ன் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினைத் தளர்வு செய்தும் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.44

நாள் : 23.07.2020
சார்வாரி, ஆடி : 8
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை கடித எண். எஸ்.12(2)/30219/2018, நாள் 28.02.2019.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கண்காணிப்புப் பொறியாளர், திட்ட உருவாக்க வட்டம், தரமணி, சென்னை அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுற்றுச்சூழல் குழுமக் கோட்டம், சென்னை அலுவலகத்தில் முதுநிலை வரைதொழில் அலுவலராகப் பணிபுரிந்து வந்த திரு எஸ்.இரத்தினகிரி 04.11.2005 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ மகளான செல்வி ஆர்.கவிதா கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் அளிக்கப்பட்டு 20.08.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், அவரது பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 20.08.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசின் ஆணை வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டது. பொதுப்பணித்துறையில், முதுநிலை வரைதொழில் அலுவலராகப் பணிபுரிந்து வந்த திரு எஸ்.இரத்தினகிரி பணியிலிருக்கும் போது 04.11.2005 அன்று காலமாகியுள்ளார். அரசு ஊழியர் காலமான மூன்று ஆண்டுகளுக்குள், அவரது வாரிசுதாரர்/மகள் செல்வி ஆர்.கவிதா தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரி 28.03.2006 அன்று விண்ணப்பித்துள்ளார். தனியரின் தந்தை காலமாகும் போது தனியரின் வயது 16 ஆண்டுகள், 6 மாதங்கள் ஆகும். மேலும், அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்கும் நாளில், தனியர் 18 வயதினை நிறைவு செய்யவில்லை. இச்செயல் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்)

Scanned with CamScanner

சட்டம், 2016–இல் பிரிவு 20(6)(b)-க்கு முரணானதாகும். எனவே, தனியரின் பணியினை வரன்முறை செய்திட, மேற்கண்ட அரசாணையில் இருந்து விலக்களிக்கவும் மற்றும் மேற்படி சட்டத்தின் பிரிவு 20(6)(b) மற்றும் தனியருக்கான பணப்பலன்களை பணியில் சேர்ந்த நாளிலிருந்து பெறுவதற்கு ஏதுவாக இச்சட்டத்தின் பிரிவு 28(2) ஆகியவற்றைத் தளர்வு செய்திடவும் வேண்டியுள்ளது. தனியர் இளநிலை உதவியாளர் பதவிக்குண்டான குறைந்தபட்ச கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பில் (Matriculation) மார்ச் 2005–இல் தேர்ச்சி பெற்றுள்ளார். தற்காலிக இளநிலை உதவியாளராக 20.08.2018 முற்பகல் பணியில் சேரும் போது அவரது வயது 29 ஆகும்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, 20.08.2018 முற்பகல் முதல் பணிபுரிந்துவரும் செல்வி ஆர்.கவிதா அவர்களின் பணியினை அவர் அப்பதவியில் சேர்ந்த நாளான 20.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்திட ஏதுவாகவும், தனியர் பணப்பலன்களை முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்பட்ட நாள்முதல் பெற்றிட ஏதுவாகவும், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–இலிருந்து தனியரின் பொருட்டு விலக்களிப்பதோடு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இன் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை அச்சட்டத்தின் பிரிவு 58– இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தித் தளர்வு செய்தும் அரசு ஆணையிடுகிறது. அதன்படி, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி ஆர்.கவிதா என்பவரின் பணியினை அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 20.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அ.சா.எண்.8201/க்யூ2/2020–2, நாள் 16.07.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, அ.சா.எண். 16854/ஜி2/2020-1, நாள் 18.07.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–9.
செல்வி ஆர்.கவிதா, இளநிலை உதவியாளர்.
(முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–9 வழியாக)
மாநில கணக்காயர்,சென்னை–18.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை /
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர் 5.8.20

5.8.20

Scanned with CamScanner